உ
சிவமயம்





பொன்னாவெளியை பிறப்பிடமாகவும்
வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

# செல்லையா இராசநாயகம்

அவர்களது சிவபதப்பேறு குறித்த

# இராச தீபம்

25.02.2022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



பொன்னாவெளியை பிறப்பிடமாகவும்
வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

## திரு. செல்லையா இராசநாயகம்

அவர்களது சிவபதப்பேறு குறித்த

# இராச தீபம்

25.02.2022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்



எங்கள் குடும்பங்களுக்கு ஒற்றுமையுடன்
ஏற்றங்கள் பல அளித்த
அமரர் செல்லையா இராசநாயகம்
அவர்களின் திருப்பாதக் கமலங்களுக்கு
இம்மலர் சமர்ப்பணமாகுக.
மனிதருள் மாணிக்கமாய் அன்பு நிறை
பேரொளியாய் பண்புடனும்
பாசத்துடனும் இன்சொல் பேசி இன்முகத்துடன்
வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
இன்று வானுறையும் தெய்வமாகி விட்டீர்கள்
உங்கள் ஆத்மா இறையடியில்
நித்திய சாந்தி பெற வேண்டும் என
இறைவனைப் பிரார்த்தித்து அன்னார் தம்
பாதங்களுக்கு இம்மலரை சமர்ப்பிக்கின்றோம்.

ஓம் சாந்தி, ஓம்சாந்தி, ஓம்சாந்தி



இங்ஙனம்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"



மலர்வு
02-02-1953

உதிர்வு
26-01-2022

அமரர்

# செல்லையா இராசநாயகம்

அவர்கள்

## திதி வெண்பா

ஆண்டு பிலவ வருடம் தைத் திங்களதில்
பூண்ட திதி தேய்பிறை அட்டமியில் - நீண்ட
நல்வாழ்வு வாழ்ந்த செல்லையா இராசநாயகம்
நல்லகதி யுற்றார் சிவன் தாள்!

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
சிவமயம்

விநாயகர் துணை

# விநாயகர் நாமவளி

கணபதி ஓம் ஜய கணபதி ஓம்
கஜமுக ஜைவங்கர கணபதி ஓம்
குணபதி யாம் சிவ கணபதி ஓம்
குண்டலி மண்டல கணபதி ஓம்

(கணபதி ஓம்)

மூஷிக வாகன கணபதி ஓம்
மூலப் பிரவண கணபதி ஓம்
மாசறு தேசிக கணபதி ஓம்
வல்லபை மோகன கணபதி ஓம்

(கணபதி ஓம்)

விக்ன விநாயக கணபதி ஓம்
விகசித நகைமுக கணபதி ஓம்
உக்ர தபோபல கணபதி ஓம்
ஊர்த்துவ நர்த்தன கணபதி ஓம்

(கணபதி ஓம்)

பார்வதி பால கணபதி ஓம்
பரசிவ ஞான கணபதி ஓம்
பூர்ண வியாபக கணபதி ஓம்
புவன புரந்தர கணபதி ஓம்

(கணபதி ஓம்)

சுத்த சதாவிச கணபதி ஓம்
சுந்தர குஞ்சர கணபதி ஓம்
நிந்திய தத்துவ கணபதி ஓம்
நின்மல சின்மல கணபதி ஓம்

(கணபதி ஓம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்





# பஞ்சபுராணம்

திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத் தடி போற்று கின்றேனே.

## தேவாரம்

இடரினும் தளரினும் எனதுறு நோய்
தொடரினும் உன கழல் தொழுதெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே
இதுவோஎம்மை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின் னருள் ஆவடுதுரை யரனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலாமணியே

அன்பினில் விளைந்த ஆரமுதே!

பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்

புழுத்தலைப் புலையனேன் தனக்கு

செம்மையே ஆய சிவபதமளித்த

செல்வமே சிவபெருமானே

இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்

எங்கெழுந்தருளுவதினியே!

முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனை
பத்திநெறி அறிவித்துப் பலவினைகள் பாறும் வண்ணம்
சித்த மலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அத்தன் எனக் கருளியவார் பெறுவார் அச்சோவே.

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலாவொன்றே

உணர்வு சூழ்கடந்ததோர் உணர்வே!

தெளிவளர் பளிங்கின் திரள்மணிக்குன்றே!

சித்தத்துள் தித்திக்கும் தேனே!

அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே

அம்பலம் ஆடரங்காக

வெளிவளர் தெய்வக் கூத்துகந்தாயை

தொண்டனேன் விளம்புமாவிளம்பே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணை மா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெம் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்டு உள்ளம்
குளிரஎன் கண்கள் குளிர்ந்தனவே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டியழுதிடப்
பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற தில்லை
சிற்றம் பலமே இடமாகப்
பாலித்து நட்டம்பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருமந்திரம்

அன்புஞ் சிவமு மிரண்டென்ப ரறிவிலார்
அன்பே சிவமாவ தாரு மறிகிலார்
அன்பே சிவமாவ தாரு மறிந்தபின்
அன்பே சிவமா யமர்ந்திருந் தாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின் வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்பு உண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும் போதுன் அடியின் கீழிருக்க என்றார்.

## திருப்புகழ்

ஏறுமயிலேறி விளையாடு முகமொன்றே
ஈசனுடன் ஞானமொழி பேசுமுகமொன்றே
கூறுமடியார்கள் வினைதீர்த்த முகமொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்ற முகமொன்றே
மாறுபடு சூரனை வதைத்த முகமொன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுகமொன்றே
ஆறுமுகமான பொருள் நீயருளல் வேண்டும்
ஆதியருணாசலமமர்ந்த பெருமாளே!

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய

# சிவபுராணம்



தொல்லை யிரும்பிறவிச் சூழுந்தளை நீக்கி
அல்ல லறுத்தானந்தம் ஆக்கியதே - எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூ ரெங்கோன்
திருவா சகமென்னுந் தேன்.

*திருச்சிற்றம்பலம்*

நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க
வேகம் கெடுத்தாண்ட வேந்தன் அடிவெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன் தன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரம்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈசன் அடி போற்றி எந்தை அடி போற்றி
தேசன் அடி போற்றி சிவன் சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி
மாயப் பிறப்பு அறுக்கும் மன்னன் அடி போற்றி
சீரார் பெருந்துறை நம் தேவன் அடி போற்றி
ஆராத இன்பம் அருளும் மலை போற்றி
சிவன் அவன் என்சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன் தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவ புராணம் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன் யான்.
கண் நுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்து எய்தி
எண்ணுதற்கு எட்டா எழில் ஆர்கழல் இறைஞ்சி
விண் நிறைந்து மண் நிறைந்து மிக்காய் விளங்கு ஒளியாய்
எண் இறந்து எல்லை இலாதானே நின் பெரும்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்று அறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல் விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல் அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா நின்ற இத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன் எம்பெருமான்
மெய்யே உன் பொன் அடிகள் கண்டு இன்று வீடு உற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனவோங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமானனாம் விமலா
பொய் ஆயின எல்லாம் போய் அகல வந்தருளி
மெய் ஞானம் ஆகி மிளிர் கின்ற மெய்ச் சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல் அறிவே
ஆக்கம் அளவு இறுதி இல்லாய், அனைத்து உலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின் தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய், சேயாய், நணியானே
மாற்றம் மனம் கழிய நின்ற மறையோனே
கறந்த பால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேன்ஊறி நின்று
பிறந்த பிறப்பு அறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள் ஓர் ஐந்து உடையாய், விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய், எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அரும் கயிற்றால் கட்டி
புறம்தோல் போர்த்து எங்கும் புழு அழுக்கு மூடி
மலம் சோரும் ஒன்பது வாயில் குடிலை
மலங்கப் புலன் ஐந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால், விமலா உனக்கு
கலந்த அன்பாகிக் கசிந்து உள் உருகும்
நலம் தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலம் தன்மேல் வந்து அருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயா ஆன தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேன் ஆர்அமுதே சிவபுரனே
பாசமாம் பற்று அறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சம் கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீராய் உருக்கி என் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாய்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய் ஞானத்தால் கொண்டு உணர்வார் தம்கருத்தில்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண் உணர்வே
போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே
காக்கும் என் காவலனே காண்பரிய பேர் ஒளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய் நின்ற
தோற்றச் சுடர் ஒளியாய்ச் சொல்லாத நுண் உணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்து அறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனை உள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்கு உடம்பின் உள்கிடப்ப
ஆற்றேன் எம் ஐயா அரனே ஓ என்று என்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய் ஆனார்
மீட்டு இங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டு அழிக்க வல்லானே
நள் இருளில் நட்டம் பயின்று ஆடும் நாதனே
தில்லை உள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லல் பிறவி அறுப்பானே ஓ என்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவன் அடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

*திருச்சிற்றம்பலம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர்
# உயர்திரு செல்லையா இராசநாயகம் அவர்களின் வாழ்க்கைச் சிறப்பு

வண்ண மணித்திரு நாடு ஈழ
வடதிசை யாழ்ப்பாணம் என்னும்
எண்ண எண்ண இனிக்கும் பதியாம்
எழில்யாழ் மீட்ட யாழ்நகர் மருங்கில்
கண்ணைப் பறிக்கும் கடல்கள் அலைகள்
கவினுற மோதும் பொன்னாவெளியில்
செந்நீர் போல திரண்ட மண்ணே
இராச நாயகம் பிறந்த மண்ணாம்.

சப்த இசையாய் அலைகள் மோத
சங்கத் தமிழும் சைவமும் வாழும்
ஒப்புர ஒழுகும் பண்புடை மாந்தர்
ஒன்றென உருகிப் பழகும் ஊரில்
நட்புறவோடு நற்குடி தன்னில்
செல்லையா செல்லம்மா இணைந்து பெற்ற
செப்புதற்கரிய இராசநாயகம்
செல்ல மகனாய்ப் பிறந்தாரன்றோ.

வயலும் கமழும் விரும்பி யாங்கு
வளமாய்ச் செய்து வாழ்வு போற்ற
அயலும் சுற்றமும் ஏற்றுப் போற்றி
அருமையாக செல்லையா செல்லம்மா
முயலும் வரைக்கும் முயன்று பெற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகள் எழுவர் உடனும் மகிழ்ந்து
செயலும் எண்ணமும் சிறக்க வாழ்ந்த
சிறப்பைச் சொன்னால் வியப்பாரன்றோ!

முன்னே வந்து மாணிக்கவாசகர்
முதலில் பிறக்க அடுத்த மகனாய்
கண்ணே மணியென திருநாவுக்கரசும்
கனிவாய் பிறக்க உருத்திராதேவியும்
பின்னே வந்து இராச நாயகமும்
பிறகு வீரலட்சுமியும் பிறக்க
இன்பமாய் திருஞானசம்பந்த மூர்த்தியும்
தெய்வ நாயகியும் பிறந்தனரன்றோ.

தங்கள் குடும்ப கௌரவம் காத்து
தம்மால் முடிந்த வரையும் உழைத்து
கண்போல் பிள்ளைகள் சிறப்புப் பார்த்து
கண்டு மற்றவர் போற்றும் படியாய்
திங்கள் ஒளியென குடும்பம் திகழ
செல்லையாவும் செல்லம்மாவும்
மங்காப் புகழோடு வாழ்ந்த வாழ்வை
மண்ணும் மக்களும் நன்கே அறிவர்.

கூடப் பிறந்த சகோதரர் மீதில்
கூடுதல் அன்பு பாசம் மிக்கார்
தேடற்கரிய உறவுகள் என்று
தேடித் தேடி அன்பு செய்வார்
வாடா மலர் போல் சகோதரர் உடனே
வாழ்ந்து இருந்த இராசநாயகம்
வாடி உதிர்ந்து போனார் ஏனோ?
வலிய வந்த சாவால் தானோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னாவெளியில் திகழும் சிறி
சைவப்பிரகாச வித்தியாசாலையில்
தன்னார்வத்தாலே இணைந்து கற்று
நனி சிறந்த அறிவும் பெற்று
இன்னார் என்று சொல்லும் படியாய்
இராசநாயகம் மதிப்பால் உயர்ந்து
அன்னார் அமரர் ஆகும் வரையும்
அழகாய் வாழ்ந்த வாழ்வே சிறப்பு.

உடன் பிறந்த சகோதரர் மூவர்
உயிர் பிரிந்த பிரிவுத் துயரால்
தடம் புரண்டு வாழ்வில் தாமும்
தளர்ந்து மனதால் நொந்ததாலோ
அடம் பிடித்து இறுதி வரைக்கும்
அரிய வதுவை செய்யாது இருந்தார்
இடம் பிடித்தார் சகோதரர் நெஞ்சில்
இனியவனாகியே இருந்து போனார்.

வாழ்நாள் ஆசை எல்லாம் சொந்த
வாழ்வில் அற்று பிறருக்காக
வாழ்தல் ஒன்றே பெரிதாய் எண்ணி
வாழ்ந்து போனார் இராச நாயகம்
சூழ்ந்த இன்ப துன்பம் எதையும்
சுகமாய் ஏற்று சகோதரர் உடனே
வாழ்ந்த சிறப்பு பெற்றார் இறுதி
வரைக்கும் உறுதி தளராது இருந்தார்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடன் பிறந்தோர் அன்பே பெரிதென
உயிரில் தாங்கி உடன் வாழ்ந்தார்
கடன் என்று கருதாது எந்தக்
கருமமும் தானே விரும்பி உவந்தார்
உடன் பிறந்தவர் பெற்ற பிள்ளைகள்
பேரப்பிள்ளைகள் எல்லோர் உடனும்
தடம் பதித்துச் சொந்தம் என்றே
எல்லாம் தனது என்றே வாழ்ந்தார்.

சைவ உணவை விரும்பி உண்பார்
சமயப் பணிகள் விரும்பிச் செய்வார்
மெய்யாய் பலரும் வியக்கும் படியாய்
மற்றவர் போற்ற வாழ்ந்து போனார்
கை கால் இயங்கும் வரைக்கும் தானே
கடுமையாக உழைத்து வாழ்ந்தார்
துன்புற்றோர் துயர் துடைத்து
துணைக் கரமாய் வாழ்ந்து வந்தார்.

ஊருக்கு நல்லது செய்த உத்தமர்
உயிர் நீங்கிப் போனார் ஏனோ?
பேருக்கு வாழாப் பெரியவர் ; பிறர்
பரிந்து பழகும் நல்லவர் ; ஏழை
யாருக்கும் உதவி செய்தே வாழ்ந்தவர்
யாவரும் கனம் பண்ணும் மூத்தவர்
வேருக்கு நீரென வாழ்ந்தவர் ; கண்ணுக்கு
நீரெழ விட்டு நீத்தார் தானோ.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பு செய்தவர் அயலவர் ஏங்கிட
அருகில் இருந்த உறவுகள் கலங்கிட
தென்பு இழந்த சகோதரர் விம்மிட
தாத்தா என்றே பேரர் புலம்பிட
என்பு நோக எல்லோரும் பதறிட
என்ன காலமோ இராச நாயகம்
முன்பு இருந்த முழுதும் மறந்துமே
முன்னைச் சிவனின் கழலடி புக்கார்.

படைத்த பரம்பொருள் பதமே கதியென
பரமனை நினைத்த படியே சென்றார்
கிடைக்க வேண்டும் இறைகதி யென்றே
இரங்குவோமே சாந்தி பெறவே!

ஓம் சாந்தி ! சாந்தி!! சாந்தி!!!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடன் பிறந்தோர் இரங்கல்

## பெரியண்ணாவின் தீராத் துயர்

எல்லாவற்றுக்கும் முன்நிற்கும்
என் உடன் பிறப்பே!
நீ இல்லா நிலையை
எண்ணிப் பார்க்க முடியவில்லை!
கல்லாய் மனசு கனக்க
கனதூரம் போய்விட்ட
மாயமென்ன?
தன்னந் தனியாளாய்த்
தானிருந்த போதும்
எண்ணம் முழுதையும்
எம்மில் வைத்து இருந்தீரே
அழைக்க முன் ஓடி வந்து
அத்தனையும் செய்வீரே
நினைக்க நெஞ்சு வலிக்க
நீண்ட தூரம் போய்விட்டீரே
ஆறுதலுக்கு ஒரு வார்த்தை பேசாமல்
ஆழ்ந்த துயர் தந்து அமைதியுற்றீரே
உடன் பிறந்த எங்களுக்கு
உடன் இருந்த உற்ற துணையே
எம்மில் இளையவனே,
தடம்புரண்டு நாம் கலங்க
தவிக்கவிட்டுப் போனதெங்கே?
உம் ஆத்மா அடைக சாந்தி!

செ.மாணிக்கவாசகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னண்ணா சிந்துக் கண்ணீர்

கூடப் பிறந்ததனாலோ
என்னவோ
கூடப் பாசம் என்னில் உனக்கு
சின்னண்ணா என்றழைத்து
சிலிர்ப்பாய் தேகம் நீ
உன் நா எமையழைக்கும் போது
உடம்பு பூராய் இனிக்கும் எமக்கு
அந்தளவிற்கு அன்பொழுக அழைப்பாய், கதைப்பாய்
இந்தளவு பாசம் கொண்ட உன்னையா
இழந்து கதறுகிறோம்
உள்ளுக்குள் துடிக்கும் அன்போ
உனக்கு கடல் போன்றது
சொல்லுக்குச் சொல் எம்மை
சொக்கிட வைப்பாய்
எம் நினைவையே உன் நினைவாய்
எண்ணியே வாழ்ந்த ஒற்றை ஜீவன் நீ
தனித்து இருந்தாலும் எமக்கு நீ
தோப்பாய் இருந்தாய்
நிழல் தந்து எம் குடும்பம் உயர
நீயும் கரம் தந்தாய்
இளையவனாய் இருந்தாலும்
எம் குடும்ப வெற்றிக்கு
தலை கொடுத்தாய்
பாகுபாடு இல்லாத
பாச உறவாய் எங்களுக்குள்
வேறுபாடின்றி வாழ்ந்த





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளை மனமே - நீயும்
இல்லை என்றால்
நம்ப முடியவில்லை வெம்பவே முடிகிறது
தண்ணீர் போல்
அனைத்திற்கும்
ஆதாரமாய் இருந்தாய்
இன்று கண்ணீர் வரவிட்டு
காலமாகி போனதேனோ?
உடன் பிறப்பே - உந்தன்
உடன் வாழ்ந்த நினைவுகள்
ஆறாது! அகலாது!

ஓம் சாந்தி ! சாந்தி!! சாந்தி!!!

செ. திருநாவுக்கரசு.

| | | |
|---|---|---|
| கீழ்த்தரமான விஷயம் | - | பொறாமை |
| நம்பக்கூடாதது | - | வதந்தி |
| ஆபத்தை விளைவிப்பது | - | அதிக பேச்சு |
| செய்யக்கூடாதது | - | நம்பிக்கைத் துரோகம் |
| செய்யக்கூடியது | - | உதவி |
| விலக்க வேண்டியது | - | சோம்பேறித்தனம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகோதரியின் குமுறல்

உயிரில் உயிராய் - என்
கூடப் பிறந்த சோதரமே!
துயரில் கலங்கவிட்டு
தூரப் பறந்ததெங்கே?
ஒன்றென்றால் துடிக்கும்
இரத்த உறவே
கண்ரெண்டும் கலங்க
கண்மூடி விட்டீரே
ஆறுதலுக்கு இருந்த
அருமைச் சோதரனே
ஆற அமர இருந்து
அன்பைப் பகிரும் இனியவனே
பக்கத் துணையாய்
பக்கத்தில் இருந்தாயே
செக்கன் பொழுதில்
சாவில் விழுந்தாயே
இப்படியோர் உடன்பிறப்பு
இனியும் வாய்க்குமோ
எப்படி இருந்த நீ
இப்படி ஆனாயே
ஒரு கூட்டுக் கிளிகள் போல
ஒரு கொடி மலர்கள் போல
ஒன்றுபட்டு வாழ்ந்த வாழ்வு
இன்று விட்டுப் போச்சுதே
நினைத்தவுடன் வருவாயே
நினைவில் வைத்து அன்பைச் சொரிவாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனவில் கூட நினைக்கவில்லை
கையசைத்து விட்டுப் போனாயே
துயரம் தாங்க
துளியும் முடியவில்லை
உயிராய் இன்றும் உன் நினைவே
உள்ளத்தில் தோன்றுதே
உடன் பிறந்தோர் நெஞ்சில்
உடன் இருப்பாய்
மறவோம் நாம் உன்னை.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ந. வீரலட்சுமி

1. எப்போதும் உங்கள் இலக்கை நிரந்தரமாக மனதிலே பதிந்து வையுங்கள்.

2. நீங்கள் எப்பொழுதும் உங்கள் இலக்கை நோக்கி வெற்றி கரமாகப் பயணித்துக் கொண்டிருப்பதாகவும், இறைவன் உங்கள் பக்கத்தில் துணையாக இருப்பதாகவும் கற்பனை செய்து கொள்ளுங்கள்.

3. உங்களிடம் எதிர்மறையான, தோல்வியான எண்ணங்கள் ஏதும் எழுகின்றபொழுது உடனடியாக அதனை உடைத்து விட்டு எப்பொழுதும் சாதகமான சிந்தனையில் இருங்கள்.

4. எப்பொழுதும் உங்கள் தொல்லைகளையும், துயரங்களை யும் சிறிதாக எண்ணி, உங்கள் பலத்தையும், நம்பிக்கையை யும் எண்ணுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகலன் சகலிமார் வருத்தம் !

பொல்லா விதி சூழ்ந்து வாழ்வை
போட்டுடைத்துப் போக - நேற்று வரை
நல்லா இருந்தவரே என்ன ஆனாய்
நாமெல்லாம் கலங்க?
எல்லாத் துயர் கடந்தும் மீண்டு
எழுந்து வந்தவரே - சாவை
வெல்ல முடியாமல் போய்விட்ட
சோகம் தான் என்னவாமோ?
உள்ளார்ந்த அன்பால் வேண்டி
உருகிப் பணித்தாலும் யாரும்
செல்லாத இடம் நாடிச் சென்றணையே
சென்ற நீ வருவதெப்போ???

கமலாதேவி. கலாவதி.
கந்தலிங்கம்

| | | |
|---|---|---|
| மிகவும் மதிக்கப்பட வேண்டியவர்கள் | - | தாய், தந்தை |
| மிக மிக நல்ல நாள் | - | இன்று |
| மிக பெரிய வெகுமதி | - | மன்னிப்பு |
| மிகவும் வேண்டியது | - | பணிவு |
| மிகவும் வேண்டாதது | - | வெறுப்பு |
| மிகப் பெரிய தேவை | - | நம்பிக்கை |
| மிகக் கொடிய நோய் | - | பேராசை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெறா மக்கள் உள்ளத்துயர்

தந்தைக்கு தந்தையாய்
தக்க வழி காட்டி நின்றவரே
சிந்தை தளர்ந்து நாம் நோக
சீவன் இழந்து போனதெங்கே?
விந்தை மிகு வாழ்வில்
விலாசமாய் வாழ்ந்தவரே
எந்தை உறவென
எமக்கிருந்த பெரிய உறவே
என்ன உதவி கேட்டாலும்
அந்தவுடன் செய்வீரே
பெற்ற பிள்ளைகள் போல்
உற்ற எம்மில் உயிராய் இருந்தவரே
சற்றும் எம்மை நினையாமல்
சாவில் விழுந்ததென்ன?
உம்மைப் பற்றி ஒரு கணமும் நினையாமல்
எம்மைப் பற்றியே எப்போதும் எண்ணித் துடிப்பவரே
செம்மையாய் வழிநடத்திய உங்கள்
சொல் மொழி நாங்கள் இனி கேட்பதெங்கே?



**சுபாசினி, கெங்கேஸ்வரன், சிந்துசா,**
**சுபாஜினி, கிருபதாரணி, கிருபாகரன்,**
**தனுஷ்யா, பவிதர்ஷன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருமக்கள் மனக் குமுறல்

மருமக்கள் என்று எம்மில்
மனம் வைத்து அன்பு செய்த மாமாவே!
பெருந்துயர் தந்து
உருவிழந்து போனதெங்கே?
அருமை பெருமையாய் எம்மை
ஆதரித்த அன்பு நெஞ்சமே
திறமையாய் நாம் உயர
தித்திப்பாய் வழி காட்டியவரே
மொழி சொல்ல முடியாத் துயரில்
விழி கரைய விடைபெற்ற மாயமென்ன?
துளி கூட உமை மறவோம்
தூயவரே உம் கூட வாழ்ந்த
ஞாபகங்களே இனி உம் நினைவை
கொண்டிருக்கும்!

**தெய்வநாயகம். வாருணி.**
**சிவதர்ஷன். சிவகஜன்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரப்பிள்ளைகள் புலம்பல்

அன்பான தாத்தாவே
அன்பொழுகும் நீங்கள் பார்த்தாலே
எப்பொழுதும் எம்மருகில் எம் நினைப்பில்
இருந்துவிட்டு
இப்போது மட்டும்
எமைப் பிரிந்து போனதெங்கே?
பண்பை உரைத்தீர்கள்
பணிவை வளர்த்தீர்கள்
இன்று நாம் காணாமல்
ஏங்குகின்றோம்.

**நிதுர்ஷா, நிவேதா, விந்துஜன், நிறோஜி, ஜீவிதா,
புகழவன், ஆரபி, கானவி, ரிதன், வர்ணவி, வாசவி,
அதியன், சர்வஜா, தேனுஷா, தேனுகா,
சானுகா, தேனிசை, கிருத்திகா, ஜஷ்விகா**

- ✷ சிரிப்பதற்கு மனித முகத்தில் ஏழு தசைகள் மட்டுமே செயற்படுகின்றன. ஆனால் கோபப்படுவதற்கு 43 தசைகள் இயங்க வேண்டும்.
- ✷ மனித உடலில் முதலில் இறக்கும் பாகம் மூளையின் கலங்களாகும்.
- ✷ உடலில் உள்ள அசுத்த இரத்தத்தை இதயத்திற்கு கொண்டு செல்லும் குழாய்கள் – நாளங்கள்
- ✷ உடலில் உள்ள சுத்த இரத்தத்தை இதயத்திற்கு கொண்டு செல்லும் குழாய்கள் – நாடிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உற்றார் உறவினர்
# ஊரார் உளக் குமுறல்

ஊர் போற்ற வாழ்ந்த
உத்தமரை இழந்த இன்று
நீர் கோர்த்த கண்களுடன்
நிற்கின்றோம் நாம் இங்கே!
பேர் பெற்ற பெரியவரே
பெருமை பேசா நல்லவரே
சீர் காத்த செம்மலே
சென்ற இடம் விட்டு வாருமைய்யா!
பங்கம் இன்றி ஊருக்கு
பணிவிடை செய்தவரே
தங்கம் மனம் கொண்ட
தாராள குணத்தவரே
சிங்கம் போல் நடந்த
சிலிர்த்த மனிதரய்யா
அங்கம் நோக அழுகின்றோம்
ஐயா வாருமய்யா!






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம்
02
.
02
.
1953



மறைவு
26
.
01
.
2022

அமரர்

## செல்லையா இராசநாயகம்

பொன்னாவெளியின் மைந்தனே
எங்கள் ராசநாயகம் அண்ணா
தன் வாழ்நாளில் இறுதிவரை
பொன்னாவெளியில் வலம் வந்தவனே
இன்று பொன்னாவெளி மண் உங்கள்
வருகைக்காய் காத்திருக்கின்றது.
அன்னாரது ஆன்மா அண்ணாமலையானோடு
இரண்டறக்கலக்க இறைவனை வேண்டுகின்றோம்
அன்னாரது குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை
தெரிவித்து கொள்கின்றோம்

தீவனல் வழிநிற்கும்

பொன்னாவெளி மாதர் கிராம அபிவிருத்தி சங்கம்

edit by pc express electronic multi shop:-0778499148 vadiyady poonagary.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழிநீர் அஞ்சலி

மலர்வு 1953 – 02 – 02



உதிர்வு 2022 – 01 – 26

## அமரர். செல்லையா இராசநாயகம்

வதனமெங்கும் முறுவல் செய்து மனமுவந்து உதவி செய்தாய்
இனியெங்கு காண்போம் இனிய உம் திரு வதனம்
இனி எப்போ கேட்போம் இனிய உம் வாய் மொழிகள்
எழுந்திரு வந்து விடுங்கள் – எம் விழிநீர் துடைத்து விட
மொழியொன்று பேசி விட்டு மறுபடியும் உறங்கி விடுங்கள்

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரிவின் துயரில்
குட்டி நண்பர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்துஇவ் வுலகு"



## அமரர்
## செல்லையா இராசநாயகம்
## (சித்தப்பா)

அன்பிற்கு இலக்கணமாய் அவனியில் வாழ்ந்து
பண்புடைமை காத்து பக்குவமாய் வழி நடந்தீர்
இரக்கத்தின் இருப்பிடமாய் ஈகை பல செய்து
எல்லோருக்கும் நல்லவராய் நாணயமாய் நடந்தீர்
ஆற்றுவாரில்லை ஆறுதல் சொல்ல சொற்கள் இல்லை.

கடல் கடந்து கண்ணீர் விடுகின்றோம் எம் அன்பு சித்தப்பா!!
சகோதரம், பிள்ளைகள் என பார்ப்பதற்கு
தின்பண்டம் பல கொண்டு ஓடோடி வருவீர்கள்
எல்லோரும் சுகமா என அடிக்கடி கேட்பீர்கள்
தேவாரம் திருவாசகங்கள் தினம்தோறும் தப்பாமல் பாட
காலனுக்கும் தெரியாமல் இறைவன் வந்தும்மை
இரவோடு அழைத்துச் சென்றானோ?

அமைதியாக துயிலும் தங்கள் ஆன்மா
இறைபதம் சேர இறைவனை இறைஞ்சுகிறோம்!!
ஓம் சாந்தி!! சாந்தி!! சாந்தி!!

உங்கள் பிரிவால் வாடும்
செல்லையா திருநாவுக்கரசு பிள்ளைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்

" ஏந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு "

எமது குடும்பத்தின் குலவிளக்காய் திகழ்ந்த
**அமரர் செல்லையா இராசநாயகம்**
அவர்களது திடீர் மரணச் செய்தி கேட்டு நாம் துயருற்று இருந்த வேளையில் நேரில் ஓடி வந்து எம்விழி துடைத்தவர்கள் தூர இருந்தாலும் ஆறுதல் உரைத்தவர்கள், தாராளமாய் கூட வந்து ஒத்தாசை செய்தவர்கள் , தொலைபேசி, சமூக வலைத்தளங்கள் மூலம் ஆறுதல் கூறியவர்கள் அனுதாபம் தெரிவித்தவர்கள், மலர் வளையங்கள், மலர் மாலைகள் சாற்றியவர்கள், கண்ணீர் அஞ்சலிகள், பதாகைகள் அச்சிட்டவர்கள், இறுதிக்கிரியைகளை ஈடேற்றிய அந்தணர்கள், ஆத்ம சாந்திக்காய் பிரார்த்தித்த பெரியவர்கள், இந்நூலை அழகுற அச்சேற்றிய அச்சகத்தார்,அன்னவர்கள் அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நன்றி

அன்னாரின்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச விரு

*பேரம்பலம் + *சின்னத்தங்கச்சி

- *சரவணமுத்து
- *பெத்தம்மா
- *அன்னம்மா
- *செல்லையா
- *தங்கம்மா

மாணிக்கவாசகர் + கமலாதேவி
- கெங்கேஸ்வரன் + நிமலராணி
  - நிதுர்ஷா
  - நிவேதா
- சுபாசினி + பீற்றர்
  - விந்துஜன்
  - நிறோஜி
- சிந்துசா + றஞ்சன்
  - ஜீவிதா
  - புகழவன்

திருநாவுக்கரசு + கலாவதி
- சுபாஜினி + சுதர்சன்
  - ஆரபி
- கிருபதாரணி + ஜெயகாந்தன்
  - கானவி
  - ரிதன்
  - வர்ணவி
  - வாசவி
- கிருபாகரன்
- தனு
- திவ
- அத

*உருத்திராதேவி + கந்தலிங்கம்
- தெய்வநாயகம் + கமலநாயகி
  - தேனுஷா
  - தேனுகா
  - சானுகா
  - தேனிசை

***இராசநாயக**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விருட்சம்

*சின்னத்தம்பி + *வள்ளியம்மை

- *இரத்தினம்
- *செல்லம்மா
- *வேலாயுதப்பிள்ளை
- *கணபதிப்பிள்ளை
- திலகவதி
- மகாராஜா

சநாயகம்

வீரலட்சுமி
+
*நவரத்தினராசா

- வாருணி + துஷாந்தன் → கிருத்திகா
- சிவதர்ஷன் + கீர்த்திகா → ஜஷ்விகா
- சிவகஜன்

*திருஞானசம்பந்தமூர்த்தி

*தெய்வநாயகி

- தனுஷ்யா + திவாகரன் → அதியன்
- பவிதர்ஷன் + வைதேவி → சர்வஜா


* இக் குறியீடு அமரர்களைக் குறிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

oundation.
m.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org